செ.வெ. எண்: 540 நாள்: 14.09.2012

## பத்திரிகைச் செய்தி

### கால்நடைக் கணக்கெடுப்பு 15 செப்டம்பர் 2012 முதல் ஆரம்பம்

19வது கால்நடைக் கணக்கெடுப்பு தமிழ்நாடு மாநிலத்தில் செப்டம்பர் 15, 2012 முதல் அக்டோபர் 15, 2012 முடிய 14,384 கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களைக் கொண்டு கிராமப்புறம், நகர்ப்புறம் மற்றும் நிலையங்களில் கால்நடைகளின் விவரங்கள் கோழியினங்கள் மற்றும் கால்நடைத் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் ஆகியவை கணக்கெடுக்கப்பட உள்ளன.

இந்த கால்நடைக் கணக்கெடுப்பானது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் நடைபெற்று வருகிறது. இது மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென தமிழ்நாட்டிற்கு சுமார் ரூ10 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

கால்நடைக் கணக்கெடுப்பு புள்ளிவிவரங்கள் அரசிற்கான கொள்கைகளை ஏற்படுத்தவும் விவசாயிகளுக்கான நன்மை பெறும் திட்டங்களை வகுப்பதற்காகவும் பயன்படுத்தப்படவுள்ளது.

இக் கால்நடைக் கணக்கெடுப்பில், பசுவினம், எருமையினம், ஆட்டினம், வெள்ளாட்டினம், பன்றியினம், குதிரையினம் கழுதைகள், நாய்கள், முயல்கள் மற்றும் யானைகளின் எண்ணிக்கை விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. கோழியினங்களில் கோழி, காடை, வாத்து, வான்கோழி மற்றும் ஈமு கோழிகள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

கால்நடைத் தொழிலில் பயன்படுத்தப்படும் உபகரணங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்களில், தானியங்கி பால் கறவை இயந்திரம், தானியங்கி தீவனப் பயிர் வெட்டும் கருவி, தானியங்கி பயிர் அறுக்கும் மற்றும் கட்டும் கருவி, தானியங்கி சாண சேகரிப்பு மற்றும் அப்புறப்படுத்தும் கருவிகள் போன்ற உபகரணங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் அடங்கியிருக்கும்.

இக் கால்நடைக் கணக்கெடுப்பில் கிராமப்புறம்/ நகர்ப்புறங்களில் 1500 குடியிருப்புகளுக்கு ஒரு கணக்கெடுப்பாளர் மற்றும் மலைப்பகுதியில் 1000 குடியிருப்புகளுக்கு ஒரு கணக்கெடுப்பாளர் வீதம் நியமிக்கப்படுகின்றனர். ஒரு மேற்பார்வையாளர் 6 கணக்கெடுப்பாளர்களின் கணக்கெடுப்பினை மேற்பார்வையிடுவார்.

இக் கால்நடைக் கணக்கெடுப்பின் போது சுமார் 2,00,00,000 (2 கோடி) குடியிருப்புகள்/ நிலையங்கள் மற்றும் நிறுவனங்களில் மாநிலம் முழுவதும் கணக்கெடுக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் பெற்றபின்பு கணக்கெடுப்பின் புள்ளிவிவரங்கள் வெளியிடப்படும். 2007 கால்நடைக் கணக்கெடுப்பின் போது சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் :

| | | |
|---|---|---|
| பசுவினம் | – | 111.88 இலட்சம் |
| எருமையினம் | – | 20.09 இலட்சம் |
| செம்மறியாட்டினம் | – | 79.90 இலட்சம் |
| வெள்ளாட்டினம் | – | 92.74 இலட்சம் |

இக் கால்நடைக் கணக்கெடுப்பு, கால்நடைத் துறை தவிர வருவாய்த்துறை, கல்வித்துறை, மகளிர் மற்றும் குழந்தைகள் நல வாரியம், ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி, விவசாயத்துறை மற்றும் வனத்துறை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுகிறது. கணக்கெடுப்பாளர்கள் தேவைப்பட்டால் வேலையற்ற இளைஞர்கள் கணக்கெடுப்பாளர்களாக நியமிக்கப்படுவர். 15.9.2012 முதல் 15.10.2012 முடிய நடைபெறும் கால்நடை கணக்கெடுப்புப் பணிகளை மாநிலம், மாவட்டம் மற்றும் வட்ட அளவில் கால்நடைப் பராமரிப்புத்துறை அதிகாரிகள் மேற்பார்வை செய்கின்றனர்.

இக் கால்நடைக் கணக்கெடுப்பு முழு அளவில் நடைபெறுவதற்கும், மேற்பார்வையிடுவதற்கும் ஏதுவாக 1" x 1" ஸ்டிக்கர் கால்நடைக் கணக்கெடுப்பு முடிந்த வீடுகள் நிறுவனங்கள் மற்றும் நிலையங்களில் அடையாளமாக ஒட்டப்படும்.

இக் கால்நடைக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் புள்ளி விவரங்கள் கால்நடைப் பராமரிப்புப் பிரிவை முன்னேற்றுவதற்காக திட்டமிடுவதற்கும், பல்வேறு திட்டங்களை வடிவமைப்பதற்கும் அவற்றின் தாக்கத்தைக் கண்காணிப்பதற்கும் பயன்படுத்தப்படும். ஆகவே பொதுமக்கள அனைவரும் சரியான தகவல்களைத் தந்து அரசுக்கு முழு ஒத்துழைப்பினைத் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆணையர்,
கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள்
சென்னை–6

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**